**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 50/2022**

**வா.சா. 1 – மீனாட்சி சுந்தர்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 23.09.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் மகாராஜபுரத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் சைவ பிள்ளைமார் சமுதாயத்தை சார்ந்தவன் என்றால் சரிதான். மகாராஜபுரத்தில் சைவ பிள்ளைமார் குடும்பங்கள் மொத்தம் ஒன்பது உள்ளது என்றால் சரிதான். மகாராஜபுரத்தில் வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவில், நடராஜகோவில் மற்றும் அம்மன்கோவில் உள்ளது என்றால் சரிதான். வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவில் சைவ பிள்ளைமார் சமுதாயத்தை சார்ந்த கோவில் என்றால் சரிதான். வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவிலுக்கு காலை மற்றும் சாயங்கால பூஜை மற்றும் விசேஷகால பூஜைகள் நடக்கும் என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தின் தற்போதைய ஊர் தலைவர் பாபு என்ற பொன்னப்பன் என்றால் சரிதான். வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவிலுக்கு பல சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை வைத்து தான் கோவிலுக்கான பூஜைகள் அனைத்தும் செய்யப்படும் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்து லீபுரம் வில்லேஜ் சர்வே எண்.40/21ல் உட்பட்ட 51 சென்ட் இருபோக நஞ்சை நிலம் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 பட்டாவில் மேற்படி சர்வே எண்

மகாராஜபுரம் வீரமார்த்தாண்ட வீனாயகர் வகைக்கு அதன் காப்பாளர் டிரெஸ்டி கணபதியாபிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து வீரமார்த்தாண்ட வீனாயகர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு கணபதியாபிள்ளை காப்பாளர் என்ற முறையில் செயல்பட்டு வந்தார் என்றால் சரிதான். கணபதியா பிள்ளை எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் அப்பா பெயர் கோபால ராமகிருஷ்ண பிள்ளை என்றால் சரிதான். நான் கணபதியாபிள்ளையின் வாரிசு என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கணிபதியா பிள்ளைக்கு உரிமைப்பட்ட சொத்து என்ற முறையில் தான் நான் இந்த வழக்கில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

நான் வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவிலின் டிரெஸ்டி என்ற பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து எனது தகப்பனாருக்கு வா.சா.ஆ.1ன் படி கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி நான் பிரதிவாதியிடம் எனக்கு உரிமைப்பட்டதாக கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்து பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் எனது அப்பா பெயருக்கு எனது தாத்தா உரிமை ஆவணம் செய்யவில்லை டிரெஸ்டின் வகைக்காகதான் கைமாற்றம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி எனது அப்பாவின் பெயரில் உரிமை மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் எனது தாத்தாவிற்கு வழக்கு பட்டிகை சொத்து ராமநாதபுரத்தில் உள்ள சிதம்பர குற்றால பிள்ளை மகன் சங்கு

பிள்ளை மேற்படி வீரமார்த்தாண்ட வீனாயகர் சுவாமிக்கு நித்திய அரிதானம் அத்தாள பூஜை ஒவ்வொரு வருடம் கார்த்திகை மாதம் சோமவாரத்திற்கு அடியேந்திரமும் வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து நடத்திக் கொள்ள வேண்டும் என்று எனது தகப்பனாரை நியமித்து எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1ல் எனது தாத்தா செய்து வந்தது போல் அவரது வாரிசுகளில் எனது தகப்பனார் கடைபிடித்து செய்வார் என்று நம்பிக்கையில் எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தான் பட்டிகை சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி வழக்கு பட்டிகை சொத்தில் இருந்து வரும் வருமானத்தின் படி பூஜை செய்வதற்கான அவகாசம் மட்டும் தான் எனது தாத்தாவிற்கு சங்கு பிள்ளை கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உரிமை மட்டும் தான் எனது தாத்தா எனது தந்தைக்கும் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி என் பெயரிலோ என் தந்தை பெயரிலோ உரிமை மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் என் தாத்தாவிற்கும் என் தகப்பனாரும் டிரெஸ்டி என்ற முறையில் மட்டும் தான் உரிமை உண்டு தனிப்பட்ட உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்த ஆவணத்தை தவிர என் தாத்தாவிற்கோ, எனது தகப்பனாருக்கோ உரிமை இருப்பதாக காட்டுவதற்கு வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 த்தை தவிர வேறு ஆவணங்கள் அதற்கு

முன்பாகவோ பின்பாகவோ கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 க்கு துணையாக அடங்கல், பட்டா, சிட்டா கிடையாது என்றால் சரிதான். எனது பெயரிலோ என் தாத்தா பெயரிலோ என் தந்தை பெயரிலோ வா.சா.ஆ.1 யை தவிர வேறு உரிமை ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் வீர மார்த்தாண்ட வினாயகரை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவில் தலைவரையோ சைவ பிள்ளை சமுதாயத்தின் தலைவரையோ நான் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தாவும் எனது அப்பாவும் வீரமார்த்தாண்ட வீனாயகர் கோவிலின் டிரெஸ்டி என்ற முறையில் தான் செயல்பட்டார்கள் டிரெஸ்டி என்ற முறையில் தான் அவர்களுக்கு ஆவணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது ஆகையால் அவர்களின் வாரிசு என்ற முறையில் வழக்கு பட்டிகை சொத்தில் எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

வாதிகள் 2,3,4,5,6 அனைவரும் எனது தந்தையின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் வாதிகள் அனைவருக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கோவிலுக்கான வயலை வேலாயுத பிள்ளை என்பர் பராமரித்து வந்தார் அதன் பின் எனது தந்தையின் அனுமதி இல்லாமல் வழக்கு பட்டிகை சொத்தில் செங்கள் சூளையாக மாற்றினார்கள் அதற்காக தாக்கல் செய்தேன். வேலாயுதம் பிள்ளை அவரது காலத்திற்கு பின்பு 1ம் பிரதிவாதி சொத்தினை கைவசம் வைத்துள்ளதால் அவரை கட்சி சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கணபதியா பிள்ளை வாரிசுகளோ, வேலாயுதம் பிள்ளை வாரிசுகளோ வழக்கு பட்டிகை சொத்து

சம்மந்தமாக அடமானமோ ஒத்தியோ, கிரய ஒப்பந்தமோ, வாடகை ஒப்பந்தமோ போட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித அடமானமும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இரண்டு அடமான பத்திரம் வா.சா.ஆ.2 மற்றும் 3 எனது தகப்பனாரும் பிரதிவாதியின் தகப்பனாரும் போட்டுக்கொண்ட அடமான பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அடமானம் 1992 ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அடமானம் 11 ஆயிரம் ரூபாயக்கு 4 வருடத்திற்கு 18 சதமான வட்டிக்கு அடமானம் வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அடமானபுறகடன் 31 ஆயிரம் ரூபாயக்கு 5 வருடத்திற்கு 6 மாதத்திற்கு ஒருமுறை 24 சதமான வட்டிக்கு அடமானம் வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 அடமானம் 1999 ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 மற்றும் 3 ஐ சேர்த்து 42 ஆயிரம் அடமானம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அடமானத்தின் படி 3 மாதங்களுக்குள் திரும்ப தரவில்லை என்றால் அடமான சொத்தும் எனது வேறு சொத்தும் மேற்படி கடனுக்கு உத்தரவாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 வரை எனது தகப்பனார் காலஞ்சென்றதற்கு முன்புவரைக்கும் மேற்படி இரண்டு அடமானத்தையும் திருப்ப வில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் 92 ல் இருந்து 21 ஆண்டுகள் மேற்படி அடமானத்தை திருப்பாமல் இருந்தார் என்றால் சரிதான். நான் 30 ஆண்டுகளுக்கு பின் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாளது தேதிவரை 42 ஆயிரம் ரூபாயை நீதிமன்றத்தில் செலுத்தவில்லை என்றால் சரிதான். எனது

வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ மேற்படி 42 ஆயிரம் ரூபாயை கட்ட தயாராக உள்ளேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 ஆவணம் எழுதும் போது எனது தகப்பனார் எனது அண்ணன் வீடு கட்டிக்கொண்டிருப்பதால் அதற்கான செலவிற்காக பணம் வாங்குவதாக குறிப்பிட்டிருந்தது சரிதான். எனது அப்பாவிற்கு வழக்கு பட்டிகை சொத்தின் வருமானத்தை வைத்து வீரமார்த்தாண்ட கோவிலுக்கு பூஜை நடத்த மட்டுமே உரிமை உள்ளதே தவிர சொந்த அவசியத்திற்கு அடமானம் வைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. ஒரு டிரெஸ்டிக்கு டிரெஸ்டின் உறுப்பினருடைய அதிகாரம் இல்லாமல் டிரெஸ்டின் சொத்தினை பொறுத்து எவ்வித ஆவணமும் எழுத உரிமை இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் 3ன் படி எனது தகப்பனாருக்கு சொத்து உரிமை கொடுக்கவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் வேலாயுதம் பிள்ளை கைவசத்திற்கு சொத்து போனது என்றால் சுமார் 30 வருடத்திற்கு முன்னதாக. மேற்படி 30 ஆண்டும் நானோ என் தகப்பனாரோ டிரெஸ்டு உறுப்பினரோ கைவசம் எடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பணம் கட்டி அடமானத்தை திருப்பவும் மேற்படி நபர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தின் வருமானத்தை கொண்டு 30 வருடமாக 1ம் பிரதிவாதியும் அதற்கு முன் அவரது தந்தை வேலாயும்பிள்ளையும் கோவிலுக்கு பூஜைக்காக செலவழித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வேலாயுதம் பிள்ளை எப்போது இறந்தார் என்றால் நான் ஊரில் இல்லாததால் எனக்கு தெரியாது. எங்கள்

சமுதாயத்தில் 9 குடும்பத்தில் எத்தனைபேர் ஊரில் இருக்கிறார்கள் என்றால் மூன்று குடும்பம் இருக்கும். நாங்கள் வெளியூறுக்கு சென்றதால் எங்கள் சமுதாய மக்கள் அல்லாமல் மற்ற சமுதாய மக்களும் பராமரித்து பூஜைகள் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து இருபோக நிலமாக இருந்து எனது தந்தை காலத்திலேயே வேலாயும் பிள்ளை செங்கல்சுள்ளை யாக மாற்றி விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போதும் அது செல்கல் சுள்ளையாக இருக்கிறது எனறால் அமைப்பு அவ்வாறு உள்ளது சுள்ள செயல்படவில்லை. மேற்படி சுள்ளை இருப்பதால் மற்ற பகுதிகளெல்லாம் முள்ளும் புதருமாக இருக்கிறது என்றால் சரிதான். நஞ்சை நிலத்திற்கான மண் வேறு செங்கல் சுள்ளைக்கான களிமண் வேறு என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து நஞ்சை நிலம் என்பதால் இந்த மண்ணை செங்கல் சுள்ளைக்கு பயன்படுத்த இயலாது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை நஞ்சை நிலத்தில் இருந்து எத்தனை லோடு மண் எடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தற்போதும் வழக்கு பட்டிகை 51 சென்ட் சம நிரப்பாக உள்ளது என்றால்சரிதான். நான் வழக்குரையில் இரண்டு லட்ச ரூபாய்க்கு மண் எடுத்ததாக கூறியுள்ளேன் அவ்வாறாக எவ்வளவு லோடு மண் எடுத்திருக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்திற்கு சேதம் ஏற்படுத்திவிட்டார் மண் எடுத்து விட்டார் என்பதை பார்வையிடுவதற்கு நீதிமன்ற ஆணையர் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் இருபோக நிலம் கிடையாது முள்புதர் நிறைந்த பயன்படுத்த முடியாத நிலம் என்றாலும்

வேலாயுதம் பிள்ளை அடமானம் கொடுத்த தேதியில் இருந்து செங்கல் சூளையாக நடத்தி வந்தார் என்றால் சரிதான். உரிய அடமான தொகையை வட்டியுடன் கட்டிதான அடமானத்தை ரத்து செய்ய கோர முடியும் என்றால் சரியல்ல. நான் அடமான தொகையை உரிய வட்டியுடன் கேட்காததால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உரிய மதிப்போ உரிய நீதிமன்ற முத்திரையை கட்டாமல் வழக்கு பரிகாரம் கோரியுள்ளதால் வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உரிய காலத்திற்குள் ஒத்தியை திருப்பாததால் வழக்கு காலவரையறை சட்டத்தின் படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 30 ஆண்டுகளுக்கு முன்பே வேலாயுதம் பிள்ளை எனது அப்பாவிடம் இருந்து எதிரிடை அனுபவம் பெற்று விட்டார் என்பதால் வழக்கு தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு வீரமார்த்தாண்ட வினாயகர் கோவிலுக்கு மட்டும் தான் தாக்கல் செய்ய முடியும் கணபதியா பிள்ளை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் உரிய சட்ட விதிமுறைபடி தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**